கொண்டு "தமிழ்நாடு கிராம வங்கி" என்ற பெயரில் சேலத்தினை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்றது. இதற்கென தமிழ்நாடு கிராம வங்கியும், ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனமும் ஒருங்கிணைந்த ஒரு வளாகம் அமைக்க சேலத்தில் 2 ஏக்கர் அரசு நிலம் வழங்கப்படும். இவ்வளாகம், வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சிகள் அனைத்தையும் வழங்கும் ஒரு மையமாக செயல்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் சார்–நீதிமன்றங்களுக்கு அடுக்குமாடிக் கட்டடம் கட்டுதல், தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் மற்றும் நாமக்கல் மாவட்டம், பரமத்தியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுதல் தொடர்பான சட்டம் மற்றும் நீதிமன்றங்கள் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் தற்போது இயங்கிவரும் பல்வேறு சார்-நீதிமன்றங்களுக்கு கூடுதல் இடம் அளிப்பதற்காக 202.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓர் அடுக்குமாடிக் கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கான ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், வாகன நிறுத்தம், உணவகக் கட்டடம் மற்றும் பொதுக் கழிப்பிடம் போன்ற கூடுதல் வசதிகளுடன் 5.09 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. நாமக்கல் மாவட்டம், பரமத்தியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், சுற்றுச் சுவர், வாகன நிறுத்தம், இரு சக்கர வாகன நிறுத்தம், உணவகம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் 10.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)